# வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கம்... ராஜ மரியாதையோடு முதல் வாக்கைப்பதிவு செய்த பெரியவர் - எப்படி?!

28.04.2024

*"நூறு சதவிகித வாக்குப்பதிவுக்காக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வந்த மதுரை கலெக்டரிடம், பெயர் நீக்கப்பட்டுள்ளது குறித்து முறையிட்டேன். ஆனால், முறையாகப் பதில் அளிக்காமல், வாக்காளர் பட்டியலைச் சரியாகப் பாருங்கள் என்று பேசினார்."*



சமீபத்தில் தமிழ்நாட்டில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பல மாவட்டங்களில் வாக்காளர்களின் பெயர், வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகப் புகார் எழுந்துள்ளது. ஏற்கெனவே நடந்த பல தேர்தல்களில் வாக்களித்தும், வாக்காளர் அட்டை இருந்தும் பலருக்கும் வாக்குரிமை இல்லாமல் போயுள்ளது. தேர்தல் அலுவலர்களிடம் முறையிட்டும், வாதம் செய்தும் எந்தப் பலனுமில்லை.

இதுபோன்ற களேபரங்கள் தமிழகம் முழுக்க நடந்து கொண்டிருக்க, வாக்காளர் பட்டியலிலிருந்து பெயர் நீக்கப்பட்ட வாக்காளர் ஒருவரை, வாக்களிக்க வைப்பதற்காகத் தேர்தலுக்கு முதல் நாள் முழுவதும் தேர்தல் அலுவலர்கள் தேடி அலைந்த சம்பவம் மதுரையில் நடந்துள்ளது.



மகபூப் ஜான்... 75 வயதான இவரைத் தெரியாதவர்கள் மதுரையில் குறைவு. ம.தி.மு.க தொழிற்சங்கத்தில் மாநில நிர்வாகியாக இருக்கும் இவர் எளிமையான வர், பொதுமக்களுக்கான போராட்டங்கள், இலக்கியக் கூட்டங்களில் முதல் ஆளாக நிற்பார்.

மேலப் பொன்னகரத்தில் வசிக்கும் மகபூப் ஜான் நம்மிடம் பேசும்போது, "ம.தி.மு.க-வில் இருந்தாலும் பல்வேறு சமூக நல அமைப்புகளோடு சேர்ந்து பணியாற்றி வருவதால் மதுரை மக்களுக்கும், அதிகாரிகளுக்கும் என்னைத் தெரியும். ஒவ்வொரு தேர்தலிலும் என் வாக்கைச் செலுத்தி வருகிறேன். நாடாளுமன்றத் தேர்தலுக்காக வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் என் பெயர் இருந்தது. ஆனால், இரண்டாவது வாக்காளர் பட்டியலில் என் பெயர் நீக்கப்பட்டு, இறந்துபோன என் மனைவி பெயர் இருப்பதைத் தேர்தலுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பு அறிந்து அதிர்ச்சியடைந்தேன்.

நூறு சதவிகித வாக்குப்பதிவுக்காக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வந்த மதுரை கலெக்டரிடம், பெயர் நீக்கப்பட்டுள்ளது குறித்து முறையிட்டேன். ஆனால், முறையாகப் பதில் அளிக்காமல், வாக்காளர் பட்டியலைச் சரியாகப் பாருங்கள் என்று அலட்சியமாகப் பேசினார்.

பொதுவாழ்க்கையில் இருப்பதைக் கூட நான் வெளிப்படுத்தவில்லை. 'நூறு சதவிகித வாக்குப்பதிவுக்காக மலை மீதெல்லாம் ஏறி பேனர் கட்டி விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்திய நீங்கள், என்னுடைய புகாரைத் தட்டிக் கழிக்கிறீர்கள்' என்றதற்குக் கோபமானவர், பதில் சொல்லாமல், 'வாக்காளர் பட்டியலை நன்றாகப் பாருங்கள், எங்கள் தேர்தல் அலுவலர்களிடம் சொல்லுங்கள்' என்றே திரும்பத் திரும்பச் சொன்னார். மற்ற தேர்தல் அலுவலர்களிடம் புகார் தெரிவித்தும் எந்தப் பலனும் இல்லை.

அதைத் தொடர்ந்து தமிழ்நாடு தேர்தல் ஆணையருக்குப் புகார் அனுப்பினேன், அதற்கும் பதில் இல்லை. வாக்குரிமையை மீட்க முடியவில்லையே என்ற கவலையோடு இருந்த நான், தேர்தலுக்கு இரண்டு நாள்களுக்கு முன்பு வழக்கறிஞர்கள் ஹென்றி திபேன், சத்தியமூர்த்தியிடம் ஆலோசனை பெற்று டெல்லியிலுள்ள தலைமைத் தேர்தல் ஆணையருக்கு விவரமாக மின்னஞ்சல் அனுப்பினேன். அங்கிருந்து உடனே எந்தப் பதிலும் வரவில்லை. மறுநாள் 18-ம் தேதி, தலைமைத் தேர்தல் ஆணையத்திடமிருந்து தகவல் வந்திருந்தது. அதில், 19-ம் தேதி வாக்களிக்க வாக்குச் சாவடிக்குச் செல்லுங்கள் என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

என் புகாரை உடனே விசாரித்த தேர்தல் ஆணையம், மாநிலம் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர்களிடம் விசாரணை நடத்தித் தவறு நடந்துள்ளதைக் கண்டுபிடித்து உடனே என்னை வாக்களிக்க உத்தரவிட்டது. இதே தகவலை மாவட்ட தேர்தல் அலுவலருக்கும் அனுப்பிய தேர்தல் ஆணையம், முதல் ஆளாக என்னை வாக்களிக்க வைக்குமாறு உத்தரவிட்டதால் என்னைத் தேடி அலுவலர்கள் அலைந்துள்ளனர். அது எனக்குத் தெரியாது. என்னைத் தொடர்பு கொள்ளமுடியவில்லை.

19-ம் தேதி வாக்குச்சாவடிக்குச் சென்ற என்னைப் பார்த்த அலுவலர்கள், உங்களைத்தான் நேற்றிலிருந்து தேடுகிறோம் என்று ரொம்பவும் மரியாதையாகப் பேசி அழைத்துச் சென்று இருக்கையில் அமர்த்தி உபசரித்து பிறகு முதல் ஆளாக வாக்களிக்க வைத்தார்கள். இது எனக்குப் பெரிய மகிழ்ச்சியைக் கொடுத்தது. மாவட்டத் தேர்தல் அலுவலரான கலெக்டர் பொறுப்பில்லாமல் பேசியதுதான் எனக்கு வருத்தத்தை ஏற்படுத்தியது. அதை ஒரு சேலஞ்சாக எடுத்துத்தான் இதைச் சாதிக்க முடிந்தது.

இப்போது பல ஊர்களில் பல வாக்காளர்களுக்கு வாக்களிக்கும் உரிமை பறிக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். அவர்களும் தேர்தலுக்கு சில நாள்களுக்கு முன்பு வாக்காளர் பட்டியலைப் பார்த்து உறுதி செய்தபின் என்னைப்போல் தலைமைத்தேர்தல் ஆணையத்தில் முறையிட்டிருந்தால் வாக்குரிமையை மீட்டிருக்கலாம்" என்றார்.

https://www.vikatan.com/government-and-politics/election/old-age-man-poling-success-story-in-madurai